ISSN : 2349 - 1914

# டுடே இதழ்

## பன்னாட்டு ஆய்விதழ்

## International Journal

ஜனவரி 2026 மலர் – 13 இதழ் – 1

டுடே இதழ் (பன்னாட்டு ஆய்விதழ்)

ISSN : 2349 - 1914

14. சங்க இலக்கியத்தில் மருத்துவம்

– தி. கல்பனாதேவி 72

15. ஈழத்தின் தமிழிசை மரபு

– த. ராபாட் அருட்சேகரன் 81

16. மகளிர் மேம்பாட்டில் மனவளக்கலையின் பங்கு

– சு. இராஜேஸ்வரி முனைவர் சு. பிரசாத் 87

17. கலைஞரின் பராசக்தி திரைப்பட வசனம் ஒரு பார்வை

– விஜயலட்சுமி 91

18. தமிழ்த் திரைப்பாடல்கள் காட்டும் சமுதாய மரபுகள்

– வெ. கணேசன் 95

19. சித்தர்களின் உலகம்

– இர. இராஜராஜேஸ்வரி 100

20. அனிச்ச மலரே!

– முனைவர் கி. இலட்சுமி 104

21. கடோபநிஷத் மற்றும் பகவத் கீதை ஒரு ஒப்பீட்டு ஆய்வு

– முனைவர் A. துர்காதேவி 109

22. 13–ஆம் ஆழ்வானின் வைணவ பயணம்

– முனைவர் தா. விஜயலட்சுமி 112

23. இலக்கியங்களில் தவ்வை வழிபாடு

– முனைவர் க. கங்கா 116

24. சிலப்பதிகாரத்தில் பெண்கள்

– முனைவர் வெ. சிவசங்கரி 120

25. நெல்லை மக்களின் சொலவடைகள் அறிமுகம்

– திருமதி நே. ஜோஸ்பின் 123

25. அண்ணலாரும் அரசியலும்

– ஹாஜா முஹினுதீன் 127

26. டி.கே.சி. ஜஸ்டிஸ் மகாராசனுக்கு எழுதிய மடல்கள்

– லி. செல்வமீனா 130

 ISSN : 2349 - 1914

# நெல்லை மக்களின் சொலவடைகள் அறிமுகம்

திருமதி நே. ஜோஸ்பின்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

முனைவர் பெ. மோகன்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை.

**முன்னுரை**

"சொல்லில் உயர்வுத் தமிழ்ச்சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா" என்றார் பாரதியார் . அத்தகைய உயர்ந்தத் தமிழ்ச்சொற்கள் பயின்று வந்த தமிழ் இலக்கியங்கள் தோன்றுவதற்கு அடித்தளமாய் அமைந்தவை வாய்மொழி இலக்கியங்கள் ஆகும். ஏட்டில் எழுதப்படாத சித்திரங்களாய், எளிய மக்களின் வாழ்வியலில் இரண்டறக் கலந்து வழிகாட்டுபவை வாய்மொழி இலக்கியங்கள் ஆகும். அவ்வாய்மொழி இலக்கியங்களின் ஒரு பகுதியாகச் சொலவடைகள் உள்ளன.

**நாட்டுப்புற இலக்கியம்**

"எழுதாக்கிளவி" என்று சொல்லப்படும் வாய்மொழி இலக்கியம் கல்வியறிவு கிட்டாத மக்களின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தைச் சுமந்து நிற்கிறது . நாட்டுப்புற இலக்கியத்தின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பதிந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ, அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்புக் களஞ்சியமாகும். எனவே நாட்டுப்புற இலக்கியம் மண்ணின் மணத்தைப் பரப்பும் சிறப்பினைக் கொண்டது. நாட்டுப்புற இலக்கியம் என்ற களஞ்சியத்தின் ஒரு பகுதியே சொலவடைகள் எனலாம். சொலவடைகள் வாழ்வியலோடு இரண்டறக்கலந்தவை என்பதை சுருக்கமாக ஆய்வு செய்யலாம்.

**சொலவடைகளின் தோற்றம்**

சொலவடைகள் எப்பொழுது தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? என்பதை ஆராயமுடியாத அளவுக்கு மிகப் பழமையானதாகும். தமிழகம் எங்கும் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள சொலவடைகளை எல்லாம் அந்தந்த வட்டாரத்து வழக்கு மொழிநடையில் தொகுத்தால் நமக்கு ஒரு மாபெரும் சம்பத்து கிடைக்கும் என்று கழனியூரன் குறிப்பிடுகின்றார்.

**சொலவடைகள்**

சொலவடைகள் என்பவை கிராமத்து எளிய மொழியில் சிறுசிறு தொடர்களாக, வட்டாரப் பேச்சு வழக்கில் காலம் காலமாக வழங்கி வருபவை. இவை பேச்சு மொழியின் அழகியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருக்கும்.

பொருட்செறிவுமிக்கச் சொலவடைகளை நாட்டுப்புற மக்களும் தம் பேச்சில் இயல்பாகப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவது தொன்மை வாய்ந்த மொழிகளுக்கே உரிய தனிச்சிறப்பாகும்.

பேச்சுமொழியின் அடிக்கூறுகளே சொலவடைகள் தான். அது தென்னாட்டு மக்களின் பட்டறிவின் சான்றுகள் எனலாம். பண்பாட்டின், நாகரீகத்தின் கலைக்களஞ்சியம். அவை பார்க்க எளிதாக இருந்தாலும், அவை வெளிப்படுத்தும் கருத்துகள் ஆழமானவையாகும். சொலவடை என்பது நாட்டார் வழக்காகும். நாட்டுப்புறக்கதைகளைப் போலவே சொலவடைகளிலும் பழமொழிகளிலும் பலவகைகள் உள்ளன. பெரியவர்கள் தாங்கள் சொல்ல வந்த செய்தியை நேரடியாகச் சொல்லாமல், மறைமுகமாக, உறைக்கத்தக்க விதத்திலும் புத்திமதி சொல்வது போலவும் உரையாடுவார்கள். சொலவடைகளை அசல் கிராமத்தான் மட்டுமே உள்வாங்கிக்கொள்ள முடியும்!

புழுதிக்குள் இத்தனை கவிமணமா?

வியர்வைக்குள் இத்தனை காவிய வல்லமையா? என்றெல்லாம் நம்மை பிரமிக்க வைப்பவை சொலவடைகள் . ஆதி மனிதப் புராதன அனுபவச் சங்கிலிகளின் முடிவற்ற நீளத்தை, அதன் நுனியை பிடித்த நம் மனதில் கொடுத்து, முழுமையை உணர்த்தி விடுபவை சொலவடைகள் . ஏட்டுமொழிக் கவிதை மாதிரி நேரானப் பொருளில் இனம் காணமுடியாதவை சொலவடைகள்.

**பழமொழி – சொலவடை வேறுபாடுகள்**

பழமொழிகள் என்பதும் சொலவடைகள் என்பதும் ஒன்றல்ல அவைகளுக்குள் நுட்பமாக பல வேறுபாடுகள் உள்ளன.

பழமொழிகள் மக்கள் மொழில் வழங்குபவை. இருப்பினும், இலக்கிய வழக்கை ஒத்திருக்கும். பழமொழிகள் நாட்டார் வழக்கில் மட்டுமே வழங்கப்படும்.

பழமொழிகள் பட்டறிவிலிருந்து உருப்பெறுபவை. அது மேதாவித்தனமாகவும், அறிவுரை கூறும் முறையிலும் அமைந்திருக்கும். கொஞ்சும் கவிதைமொழியில், துள்ளலும் எள்ளுமான மொழிப் பயன்பாட்டில், உண்மையை நுட்பாமாக வெளிப்படுத்தும் முறையில் சொலவடைகள் அமைந்திருக்கும்.

செம்மையான மொழி நடையிலும், திட்டமிட்ட சொற் கட்டமைப்புடன் பழமொழி அமைந்திருக்கும். சொலவடைகள், அவை தோன்றிய வட்டார வழக்கில் அமைந்திருக்கும். கிராமத்து பட்டறிவின் அடிப்படையில் பிறந்திருக்கும்.

பழமொழிகளுக்கான பொருளை அகராதிச் சொற்களைக் கொண்டும் புரிந்துகொள்ள இயலும். ஆனால், சொலவடைகளுக்கான பொருளை அதைச் சொன்னவரின் வாழ்வியலில் இருந்துதான் புரிந்துகொள்ள முடியும்.

இவை போன்ற சில நுட்பமான வேறுபாடுகள் பழமொழிக்கும் சொலவடைக்கும் இடையே அமைந்துள்ளன.

**சொலவடைகளின் தன்மை**

**“கிராமத்து மக்களின் உதடுகளில் உலவி ஞாபக மடியில் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவை சொலவடைகள் ”**

கிராமத்து மக்களின் வாழ்வியலோடு இரண்டறகலந்தவை சொலவடைகள். கிராமத்து வெள்ளந்தி மனிதர்களால் சொல்லப்படுவது சொலவடைகள். பாட்டிகளின்(ஆத்தா, அப்பத்தா, ஆச்சி) வாயிலிருந்து சாதாரணமாக வந்து விழுபவை சொலவடைகள்.

கிராமத்துத் தரவுகள் என்றால் அவற்றில் சில பிற்போக்கான தகவல்களும் அறக்கழிவான சொல்லாடல்களும் இருக்கும், சொலவடைகள் அதற்கு விலக்கல்ல.

ஒருசெடியை மண்ணிலிருந்து பிடுங்கும்போது செடியின் வேரோடு மண்ணும் ஒட்டிக்கொண்டுதான் வரும். எனவே தான் பாரதி வேரும் வேரடிமண்ணும் என்று பேசினார். நமக்கு வேரடி மண் வேண்டாம் என்றால் தண்ணீரால் செடியின் வேரைக் கழுவத்தான் வேண்டும். மண் வாசனையோடு சில பதிவுகளைச் செய்யும் போது இது போன்ற சில அறக்கழிவுகளை நாம் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று கழனியூரன் கூறுகிறார்.

**சொலவடைகளின் பயன்கள்**

உணர்வுகளை வெளிப்படுத்த, யோசனை சொல்ல, ஆறுதல் கூற, அறிவுரை கூறி நெறிப்படுத்த, விமர்சனம் செய்து எச்சரிக்க, சிக்கலான நேரத்தில் தீர்வுகள் தேடித்தர, கோபம், குமுறல், ஆற்றாமை, கழிவிரக்கம், வலி, சலிப்பு என அத்தனை மனச்சுமைகளையும் இந்த சொலவடைகளில் இறக்கி வைத்து, நம் முன்னோர் பயன் அடைந்திருக்கின்றனர்.

**சொலவடைகளின் இன்றையநிலை**

அஞ்சல்தலை, நாணயங்கள் சேகரிப்பது போன்றவற்றை விடவும் ஒரு மொழியின் அணிகலன்களான சொலவடைகளையும், அதன் வட்டார வழக்குகளையும் சேகரிப்பது முக்கியமாகும். இந்தத் தலைமுறையிலிருந்து எத்தனை சொலவடைகள் அடுத்த தலைமுறைக்குச் செல்லும் என்று தெரியவில்லை. பத்து சொலவடைகள் சொல்லத் தெரிந்த இந்தத் தலைமுறையினரைப் பார்த்தல் அரிது.

 ISSN : 2349 - 1914

**நெல்லை மக்களின் சொலவடைகள்**

திருநெல்வேலி மக்களின் வாழ்க்கையில், காலைப் பொழுது விடிந்தது முதல் இரவு தூங்கும் வரையில், பலரின் பேச்சில் சொலவடைகள் இடம்பெறுகின்றன.

எனது ஆச்சியின் பேச்சைச் சொலவடையின்றி கேட்பது அரிதினும் அரிது. நின்றாலும் அமர்ந்தாலும் நடந்தாலும் எதற்கெடுத்தாலும் சொலவடைகள் நிறைந்திருக்கும். புலிக்கு பிறந்தது பூனையாகுமா? என்பது போல், என் அன்னையின் சொலவடைக் கேட்காமல் நான் உறங்கிய நாட்களே இல்லை எனலாம்.

நான் எட்டாம் வகுப்பு பயின்றபோது என் வகுப்புச் சகதோழி ஒருத்தி கிட்டத்தட்ட நூறு சொலவடைகளைச் சரளமாக கூறுவாள். எனது ஆச்சி மற்றும் அம்மாவைப் போல் நானும் பேசும்போது என்னையறியாமல் சொலவடைகளை சொல்லி கொண்டே இருப்பேன்.

என் மண்மணம் மாறா சொலவடைகளை தொகுத்து, ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பது என் ஆவல். இந்த நவயுக சந்ததிகளுக்கு சொலவடைகளைப் பழைமை மாறாமல் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது நீண்ட நாள் இலக்கு. அவற்றின் சிறுதுளிகள் இதோ ...

**என் அன்னை கூறிய சொலவடைகளில் சில ...**

- ❖ ஏர் உழுறவன் இளப்பமா இருந்தா, மாடு மச்சான் மொற கொண்டாடுமாம்!
- ❖ விடிய விடிய ஆடு களவாம்பானாம்
- ❖ விடிஞ்சதும் ஆடு கடிக்க வருதும்பானாம்!
- ❖ அறுக்கமாட்டாதவன் இடுப்பில ஐம்பத்திரண்டு பன்னருவா!
- ❖ இந்தப் பிள்ளையும் பெறுவானேன் சுக்கு மிளகும் திம்பானேன்!
- ❖ இரக்கப்போனாலும் சிறக்கப் போகணும்!
- ❖ கழுதைக்கு பேரு முத்துமாலையாம்!
- ❖ நாய்க்கு வேலையுமில்ல
- ❖ உக்கார நேரமுமில்ல!
- ❖ நின்னா நெடுஞ்சுவறு விழுந்தா கட்டமண்ணு!
- ❖ காத்துட்டுக்கு குதிர வாங்கினா அது காத்தா பறக்குமா?
- ❖ வித்தாரக்கள்ளி விறகுவெட்ட போனாலாம் கத்தாழ முள்ளு கொத்தோட குத்துச்சாம்!

**தமிழ் மாதங்களும் சொலவடைகளும்**

இனி மாதம்வாரியான சொலவடைகளைக் கீழே காணலாம்.

- ❖ "சித்திரை எள்ளை சிதறி விதைக்கணும் "
- ❖ "வைகாசி மாசம் ஆத்துல தண்ணி"
- ❖ "ஆனியில் அடிவைத்தாலும் கூனியில் குடிபுகாதே"
- ❖ "ஆடியில் ஆனையொத்த கடா, புரட்டாசியில் பூனைபோல ஆகும் "
- ❖ "ஆடி விதைப்பு ஆவணி முளைப்பு"
- ❖ "புரட்டாசியில் பொன் உருகக் காயும் ஐப்பசியில் மண் உருகப் பெய்யும் "
- ❖ "ஐப்பசி மாதம் அடைமழை கார்த்திகை மாதம் கனமழை"
- ❖ "கார்த்திகை மாசம் கல்லுக்குள் இருக்கும் நெல்லும் கதிராகும் "
- ❖ "மார்கழி மழை மண்ணுக்கும் உதவாது"
- ❖ "தையிலே நெல்விதைத்தால் தவிட்டுக்கும் ஆகாது"
- ❖ "மாசி மின்னலில் மரம் தழைக்கும் "
- ❖ "பங்குனி மாதம் பத்துக்கும் நஷ்டம் "

**முடிவுரை**

பொதுவாக சொலவடைளுக்கு அவை சொல்லப்படும் சூழலை வைத்தே பொருள் புரிந்து கொள்ள வேண்டும். சொலவடைகளின் மூலம் நம் முன்னோர்களின் பழக்க வழக்கங்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் தேடி இனம் கண்டுகொள்ளும் வாய்ப்புள்ளது.

சொலவடைகளுக்கு விளக்கம் சொல்பவர்கள், அதை உண்டாக்கியவனின் அனுபவத்தை மறந்து விட்டு, தத்தம் அனுபவங்களுடன் அவற்றைப் பொறுத்திப் பார்த்து விளக்கம் சொல்கிறார்கள்.

எனவே, சொலவடைகளைச் சேகரித்து தொகுத்தால் மட்டும் போதாது. பண்டைய இலக்கியங்களுக்கு உரையாசிரியர்கள் விளக்கமாக உரை எழுதியுள்ளதைப் போல,

சொலவடைகளுக்கு பெரியவர்கள் யாராவது விளக்கம் சொல்லவும் வேண்டும்.

**ஆய்வுக்கு உதவிய நூல்கள்**

1. நாட்டார் வழக்காறுகள் – முனைவர் தே. லூர்து
2. சொலவடைகளும் சொன்னவர்களும் – ச. மாடசாமி
3. தெக்கத்தி சொலவடைகள் – கழனியூரன்
4. சுவையான சொலவடைகள் – மாதவராஜ்